பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ, எம். பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 2௳ (18—9—67) திங்கள் ★ வெளியூர் : புரட்டாசி 3௳ (19—9—67) செவ்வாய் [இதழ் : 80

கண்டறியாதன கண்டோம்!

'இடைவெளி' மறைந்தது— இதயங்கள் கூடின!

'இப்படி ஒரு நிகழ்ச்சி நிகழுமா ?' என்று கடந்த பதினெட்டு ஆண்டுக்காலமாக ஏங்கிக்கொண்டிருந்தவர்கள் எண்ணற்றோர் !

'அப்படியா ?'—ஒருகாலும் நடவாது ! கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் உதிக்கலாமே தவிர, அந்த நிகழ்ச்சியை இனிக் கனவில்கூடக் காணமுடியாது' என்று அறுதியிட்டுச் சொன்னோர் பலர் !

'நடக்க விடுவோமா நாங்கள் ? நடந்தாலும் பார்த்துக் கொண்டிருப்போமா ?' என்றெல்லாம் ஆர்ப்பரித்தவர்கள் சிலர் !

'ஆனாலும், இன்றைக்கில்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு நடக்கத்தான் போகிறது' என்று நம்பிக்கை கொண்டிருந்தவர்களும் இருக்கத்தான் செய்தனர் !

இதயத்தின் அடித்தளத்தில் புதைந்து இருந்துவந்த அந்த 'நம்பிக்கை', நேற்று திருச்சித் திருநகரிலே செயலுருவம் பெற்றது !

'இடைபட்ட பதினெட்டு ஆண்டுகளும் பதினெட்டு நாட்கள்தாமோ' என்று எண்ணத்தக்க வகையில் சுருங்கி, எண்ணத்திலிருந்தே மறைந்துவிட்டன !

மீண்டும் 1948-ம் ஆண்டுக் காட்சியைக் கண்டது திருச்சி மாநகரம் !

விலகி நின்ற இருவரும் கூடினர்—உதட்டால் அல்ல—உள்ளத்தால் பேசினர் ! உவப்பத் தலைகூடி உள்ளப் பிரிந்தனர் !

'ஐயா வாழ்க !—அண்ணா வாழ்க !' என்ற முழக்கங்கள் மலைக்கோட்டையில் முட்டி மோதி எதிரொலித்தன ! விண்ணை எட்டின ! கேட்டோர் உள்ளங்களையெல்லாம் தொட்டன !

'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்றார் அண்ணா ! 'இல்லை, இல்லை ; இரண்டு துருவங்களாகிவிட்டனர்' என்றனர் மாற்றார் !

இதோ ஈரோட்டு மாநாட்டு (1948) நிகழ்ச்சியை நினைவுபடுத்தியிருக்கிறது திருச்சி பெரியார் பிறந்த நாள் விழா !

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக அல்ல—முன்னாளில் இயக்கத்துக்குத் 'தளபதி'யாகத் திகழ்ந்தாரே அந்த நிலையில் கண்டார் பெரியாரை ! 'அறிஞர் பெருந்தகை' என்று பெரியாரே போற்றும் நிலையெய்திவிட்ட இன்று—அடக்கமான மாணாக்கன் நிலையில்—கண்டு வணங்கினார் !

'நான், வாழ்நாளில் கண்ட ஒரே தலைவர் பெரியார் அவர்கள்தாம் ; அவரைத் தவிர, பிற யாரையும் நான் தலைவராக ஏற்றதுமில்லை—ஏற்கப்போவதுமில்லை ; அவருக்காகவே தலைவர் நாற்காலியை இங்கு காலியாக வைத்திருக்கிறேன் ; அவர் நினைத்தால் என்றைக்கு வேண்டுமானாலும் வந்து அதில் அமர்ந்துகொள்ளலாம்' என்று அன்றொரு நாள்—திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட 1949 செப்டம்பர் 17-ம் நாள், இராபின்சன் பூங்காவில் சொன்னாரே அண்ணா—அந்தப் பொருள் புதைந்த — புகழ் நிறைந்த வாசகங்களின் பொலிவினை நேற்றுக் கண்டோம் !

பெரியாருக்குப் பிறந்த நாள் நேற்று ! அண்ணாவுக்குப் பிறந்த நாள் இரண்டு நாளுக்கு முன்னர்தான் வந்தது !

பிறந்த நாளில் கண்டு மகிழ்ச்சி தெரிவிக்கப் பெரியார் மாளிகைக்குள் நுழைந்தார் அண்ணா—மல்லிகைப் பூ மாலையுடன் !

'தந்தை'க்கு வாழ்த்துக் கூறும் வயது தனயனுக்கு இல்லையல்லவா ? மகிழ்ச்சியைத்தான் காணிக்கையாக்கச் சென்றார் !

வாழ்த்தும் வயது பெற்றிருக்கும் பெரியாரோ, வந்த மகனை வாரியணைத்துக்கொண்டு உச்சிமுகந்து கன்னத்தைக் கிள்ளிவிட்டு, மகிழ்ச்சியையும் பூரிப்பையும் சொரிந்திருக்கிறார் !

"உனக்கும் நேற்றுப் பிறந்த நாள் வந்ததே—நான் வாழ்த்துக் கூறவேண்டாமா ? 'இதோ உனக்கும் நான் மாலையணிவித்து வாழ்த்துக் கூறுகிறேன் ; 'நீ அணிவித்தது மணம் பரப்பும் மல்லிகை மாலை இதோ வாடாத மாலை' என்று கூறி, தமக்கேயுரிய சிக்கனத்தின் 'சின்ன'மாக சரிகை மாலையொன்றை அணிவித்திருக்கிறார் பெரியார் !

பதினெட்டு ஆண்டுக்காலம் தமிழ்ப் பெருங்குடி மக்கள் ஏங்கி எதிர்பார்த்து இருந்த இந்தக் காட்சியை இன்று கண்டு களிக்கின்றனர் !

இருவரும் ஒரே தேரில் அமர்ந்து—மக்களின் உற்சாகப் பெருவெள்ளத்துக்கிடையே மிதந்து—திருச்சி மாநகர வீதிகள் வழியே பவனிவந்திருக்கின்றனர் ! அடடா ! அந்தக் கண்ணுக்கினிய காட்சியைக் காணும் பேறு, தமிழகத் தலைநகருக்குக்கூடக் கிடைக்கவில்லையே !

'பெட்டிச் சாவியைப் பிள்ளையிடம் ஒப்படைக்கப் போகிறேன்' என்று தந்தை சொல்ல—'பெட்டிச் சாவி என்னிடம் இருந்தாலும் தந்தையைக் கேளாமல் பெட்டியைத் திறக்க மாட்டேன்' என்று 'தனயன்' கூறிய ஈரோட்டு மாநாட்டு நிகழ்ச்சியும் இந்த நேரத்தில் எல்லோர் மனத் திரையிலும் தெரிகின்றது !

பெரியாரின் பொன் திருமேனியை வெண்கலத்தால் வடித்து நிறுத்தித் திறப்பு விழா நிகழ்த்தியிருக்கின்றனர், திருச்சிவாழ் மக்கள் !

அந்த விழாவுக்கு முன்னதாகப் பொன்னாடை போர்த்து விழா நடைபெற்றது.

சட்டமன்ற அவைத் தலைவர் ஆதித்தனார் தலைமையேற்க—செட்டிநாட்டரசர், பெரியாருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்க—அண்ணா அவர்கள் பெரியார் அவர்களைப் பாராட்டி—பெரியார், அண்ணாவையும் அண்ணா ஆட்சியின் மாட்சியையும் பாராட்ட—வெள்ளம்போல் தமிழர் கூட்டம் அந்தக் காட்சியைக் கண்டு களிக்க—அந்த முழக்கங்கள் கேட்டு மகிழ—நாமெல்லாம் அந்த இன்பச் செய்தியை அறிந்து மகிழ்கிறோம் !

வாழ்க பெரியார் ! வாழ்க அண்ணா !

மா. செ.

'இதயம்' இருக்கிறது—'இருப்பு' இல்லையே என்கிறார் இந்திரா!

"மொத்தமாகக் காங்கிரசு அல்லது எல்லா மாநிலங்களுமே மத்திய அரசுடன் நன்கு ஒத்துழைக்கின்றன !

" 'புதுடில்லி சரியாகக் கவனிப்பதில்லை' என்று காங்கிரசு மாநிலங்களிலிருந்து கூடப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன !

"காங்கிரசோ, காங்கிரசு அல்லாத மாநிலங்களோ—அவைகள் தெரிவிக்கும்

கோரிக்கைகள், கேட்கும் உதவிகள் நியாயமானவைகளாக—தேவையானவைகளாகத்தான் இருக்கின்றன !

" 'முடியும்' என்ற நிலை மட்டும் இருந்தால், அத்தனைக்கும் உதவ மத்திய அரசுக்கும் ஆசைதான் ; மாநிலங்களுக்கு அது பெருத்த நன்மையாகவும் இருக்கும் ; ஆனால் மத்திய அரசிடம் போதுமான நிதி வசதிதான இல்லை ; இத் தேவை மட்டும் பூர்த்தியடைந்துவிட்டால், மாநிலங்கள் கேட்பவற்றையெல்லாம் உதவ மத்திய அரசு தயங்காது"

என்று புதுடில்லியில் நடந்த வட்டார மொழிப் பத்திரிகையாசிரியர்கள் கூட்டத்தில் தலைமையமைச்சர் இந்திரா குறிப்பிட்டிருக்கிறார்.

கோலாப்பூர் போலீசாரின்

விசித்திர நடவடிக்கை

★

பம்பாய் சிவசேனைத் தலைவர் பால் தாக்கரே கோலாப்பூரில் பேசிய பொதுக்கூட்ட மொன்றிற்குப் போலீசார் பக்கபலமளித்திருப்பதுடன், சிவசேனைக்கு எதிராக அமைதியான முறையில் எதிர்ப்பு முழக்கமிட்டவர்களைத் தடிகொண்டு விரட்டியடித்து, இருவரைக் கைது செய்துமிருக்கின்றனர் !

" தமிழர்கள், மராட்டியர்களுக்கு இழைக்கும் அநீதியை இனியும் பொறுத்திருக்கமுடியாது" என்று தாக்கரே அக்கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

ஜெய்ப்பூரில் ஆங்கிலப் படம் ஓடவில்லை!

மொழிப் போராட்டம் அங்கே வேறொரு முறையில் !

★

கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் ஜெய்ப்பூரில் ஆங்கிலப் படங்களைத் திரையிடுவதை, அங்குள்ள கொட்டகைகள் நிறுத்திக்கொண்டன !

மாணவர்கள் நடத்திய ஆங்கில எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகவே இந்த முடிவு எனத் தெரிகிறது !

' ஆங்கிலப் படங்கள் மொழிப் போராட்டத்தின் காரணமாக நிறுத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்" என்று ஜெய்ப்பூர் செய்தி மேலும் தெரிவிக்கிறது.

தமிழக அரசு ஆணை

பொதுமக்களிடமிருந்து அரசுக்குத் தமிழில் வரும் கடிதங்களுக்கு அரசு தமிழில் பதில் அனுப்பும் ஏற்பாடு தற்போது நடைமுறையில் இருந்துவருகிறது.

இதனைத் தொடர்ந்து அரசு பொதுத் துறையின் தமிழ் வளர்ச்சிப் பிரிவுகள் அனைத்திலும்—அதாவது ஆட்சி மொழிக் குழு அலுவலகம், தமிழ் நூல்கள் வெளியீட்டுக் கழகம், தமிழ் வளர்ச்சித் துறையின் மொழி பெயர்ப்புப் பிரிவு ஆகியவற்றில் எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் தமிழிலேயே நடத்தப்படவேண்டும் என்று அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட அலுவலகங்களில் கீழ்க்காணும் பணிகள் ஆங்கிலத்திலேயே நடத்தப்பட வேண்டும் :—

சம்பளப் பட்டியல், சில்லறைச் செலவுகள், பயணப் படிகள், படிப்பு உதவிப் பணம் கருவூலங்களுக்கும், சென்னை அக்கவுண்டெண்ட்-ஜெனரலுக்கும், சென்னை சம்பளக் கணக்கு அதிகாரிக்கும் எழுதப்படும் கடிதங்கள்.

கிராம நீதிமன்றங்கள் நீங்கலாக மற்ற நீதிமன்றங்களுடன் நடத்தப்படும் எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும், பிற மாநிலங்களுடனும் மத்திய அரசு அலுவலகங்களுடனும் நடத்தப்படும் கடிதப் போக்குவரத்துக்கள்.

அப்பீல் அல்லது கமிஷன்களுக்கு உள்ளாகக்கூடிய எல்லா சட்டபூர்வமான உத்தரவுகள்.

அயல்நாட்டுத் தூதரகங்கள், அயல்நாட்டு ராஜீய உறவுப் பணிகள் சம்பந்தப்பட்ட நபர்கள், இதர வெளிநாட்டவர் ஆகியோருடன் நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கள்.

★ அறிஞர் அண்ணா நன்றிச் செய்தி ★

நேற்று எனக்குப் பிறந்த நாள் வாழ்த்து அளித்த அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் பிறந்த நாளை, தமிழகத்தில் விழாவாக நடாத்தியது எனக்குப் பெருமையை அல்ல—பொறுப்புணர்ச்சியைத்தான் அதிக அளவு தந்திருக்கிறது.

'என் வாழ்வு, எனக்காக அல்ல; மக்களுக்காக' என்பதை நினைவுபடுத்துவதே அந்த விழா!

'என் வாழ்வு எனக்காக மட்டும் அல்ல; நாட்டுக்காக' என்ற கருத்தை நாட்டவர் போற்றுகின்றனர் என்பதற்கு நேற்றைய விழா ஓர் எடுத்துக்காட்டு!

பொதுமக்களுக்கு இயன்ற அளவு பணியாற்றுவதை என் இயல்பாக ஆக்கிக்கொண்டுள்ள எனக்கு, இத்தனை அளவுள்ள நல்லெண்ணத்தைத் தந்துதவியவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் உற்சாகத்துடனும், உறுதியுடனும், நம்பிக்கையுடனும் தொடர்ந்து பணியாற்றிவருவதே நான் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளும் வழி எனக் கொண்டுள்ளேன்.

எளியவனான எனக்கு மக்கள் தந்துவரும் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், கனிவும் அளவிட முடியாத மதிப்புள்ள பெரிய செல்வமாக அமைந்திருக்கிறது!

மிகச் சங்கடமான சூழ்நிலை அமைந்துள்ள நேரத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள எனக்கு, இந்த நல்லெண்ணமும் பேராதரவும் பெரிய அளவுக்குத் தேவை!

திட்டமிட்ட முன்னேற்றம்—கசப்புணர்ச்சி அற்ற சமூக வாழ்வு—இவை, என் குறிக்கோள் -- பல ஆண்டுகளாக!

'தமிழக அரசை நடத்திச் செல்லப் பணிக்கப்பட்டவன்' என்ற முறையில், இந்த குறிக்கோள் நிறைவேறப் பாடுபடுவதே என் வேலைத் திட்டம்!

இதற்குத் தக்க வழிமுறைகளைத் தெரிவிக்கும் அறிவாளர்கள் பலர் நம்மிடையே உளர்! அவர்களின் துணை கிடைக்குமென்ற உறுதியே எனக்கு வழித்துணை!

நான் தவறான பாதையில் சென்றுவிடாமல் தடுத்தாட்கொள்ளும் பொறுப்பினை மேற்கொள்ளுமாறு நல்லோரை வேண்டிக் கொள்கிறேன்.

"பசிப் பிணி அகன்று—தொழில் வளம் மிகுந்து—தோழமை மலர்ந்து—பகுத்தறிவு ஓங்கி—பண்பாளர்களாக நமது மக்கள் நல்வாழ்வு பெற்றிட எனது தொண்டு பயன்பட வேண்டும்" என்பதே நான் மேற்கொண்டுள்ள வாழ்வின் இலக்கணம்!

'இது, காலையில் திட்டமிட்டு, மாலையில் முடிந்திடக்கூடிய காரியமல்ல' என்பது மட்டுமல்ல—என்னால் மட்டுமே முடிந்திடக் கூடிய காரியமுமல்ல!

இது, என்னைப் பணியாளனாகக் கொண்டு நல்லோர் பலர் தொடர்ந்து செயலாற்றி முடித்திடத்தக்க திட்டமாகும்.

நேற்றைய விழா, 'என்னைச் சமூகம் மேலும் பணியாற்ற இடும் கட்டளை' எனக் கொள்கிறேன்!

"இத்துணைப் பெரிய காரியமாற்ற நம்மால் முடியுமா என்று ஏக்கமடையாதே; நாங்கள் உடன் இருக்கிறோம்" என்று தமிழக மக்கள், நேற்று அறிவித்துள்ளனர்—'விழாவின் உண்மைப் பொருள் அதுதான்' எனக் கருதுகிறேன்!

"எங்களின் நல்லெண்ணமும் வாழ்த்துக்களும் உனக்குப் புதிய தகுதியையும், திறமையையும் தந்திருப்பதாகக்கொண்டு, மேலும் உறுதியுடன் பணியாற்றிடுக" என்று நேற்றைய விழா ஆணையிடுகிறது!

"உனக்கு வயது 59; ஆமாம்; விரைந்து வேலை செய்; வெற்றிப் பாதையிலே நட; மக்கள் தொண்டாற்று" என்று நேற்றைய விழா கட்டளையிடுகிறது!

"ஆணையினை ஏற்று, அகமகிழ்வுடன் நடந்திடுவேன்" என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சமூகத்துக்குக் கொடுத்துள்ளதைக் காட்டிலும், பலமடங்கு அதிகமாகச் சமூகத்திடம் பெற்றுக்கொண்டுள்ளேன்—நல்லெண்ணத்தை!

இதனைச் சீரிய தூய செயல்களின் மூலம், திருப்பித் தருவது என் கடமை!

அதற்கான பக்குவத்தை விழா உணர்வு எனக்களித்திருக்கிறது! நன்றி!

அன்பன்,
அண்ணாதுரை
16—9—67

முன்னிலும் உற்சாகமாகப் பணிபுரிவீர்!

அண்ணா அன்புரை

"'நாம்தான் ஆட்சிக்கு வந்துவிட்டோமே—இனி என்ன?' என்று கழக உறுப்பினர்கள் இருந்துவிடக் கூடாது. முன்னைக்காட்டிலும் புதிய உற்சாகத்தோடு செயல்பட வேண்டிய நேரம் இது!

"கழகத்தவர் சோர்ந்தால், நாடும்—அதை நடத்திச் செல்லும் அரசும் சோர்ந்துவிடும்!

"கழகத்துக்கு நல்லவிதமான வலிமையும் வாய்ப்புகளும் ஏற்படாவிட்டால், அதனால் நாட்டுக்கும்—அரசுக்குமே நட்டமாகும்!

"முன்னால் நமக்கிருந்த நிலைமை வேறு—இப்போதுள்ள பொறுப்புகள் வேறு! 'இன்னின்னது ஏன் செய்யவில்லை' என்று அன்றிருந்த ஆட்சியாளரைப் பார்த்துக் கேட்பதில் அப்போது நமது கடமை அடங்கியிருந்தது! இப்போது 'இன்னின்னது செய்யப்பட வேண்டும்' என்று நாமே சிந்தித்துத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டியுள்ளது!

"கதிர் முற்றாத நிலையில் பயிர், காற்றடித்த பக்கமெல்லாம் ஆடுவதைப் பார்க்கலாம்! கதிர் முற்றிய நிலையில், நெற்பயிர், வயலில் படுத்தபடி இருக்கும்!

"முற்றிய கதிரின் அடக்க உணர்ச்சியை நாம் பெற வேண்டும்.

"கழக ஆரம்பக் காலத்திலிருந்தே இதை நான் வலியுறுத்தி வந்துள்ளேன். அவ்வழியில் கழகத் தோழர்கள் நடந்து வந்ததால்தான், நாம் இன்றைய நிலையை எட்டினோம்.

"நான் ஆட்சிக்கு வந்த பிறகுதான் என்னை மக்கள் மதிக்கிறார்கள் என்பதில்லை; அன்றும் மதித்தார்கள் — அன்றும் இன்றும் மதிக்கிறார்கள், 'அண்ணா' என்றார்கள், இன்றும், 'அண்ணா' என்கிறார்கள்:

"ஆனால், நான் ஆட்சிக்கு வந்த பிறகு, என்னை, 'அண்ணா, அண்ணா' என்கிறார்கள் சிலர்! இவர்களிடத்தில் நான் மிகுந்த கவனத்துடன் இருப்பேன்!"

---அறிஞர் அண்ணா

எதையும் தாங்கும் இதயம் பெறுவீர்!

"'பொறுத்தவர் பூமி ஆள்வார்' என்று பெரியவர்கள் சொல்வதில்லையா? பூமியை ஆளாவிட்டாலும், தமிழ் நாட்டையாகிலும் ஆளுகிற நிலையில் இருக்கிறோம்!

"ஆம்! பொறுத்தோம்; எதையெதையெல்லாம் பொறுத்துக்கொண்டோம் என்பதை எண்ணும்போது, மனவேதனை மேலிடுகிறது!

"இப்போதும் ஏசுகிறார்கள்—தாங்கிக்கொள்வோம்! அந்த ஏசல்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை! இதையும் தாங்கிக் கொள்வோமானால், இன்று இருப்பதைவிட நேர்த்தியான நிலையை நாம் அடைவோம்!

,'அவர்கள் எதைச் செய்தாலும் திருப்பிச் செய்வது என்பதானால், அதற்குப் பத்துநாள் போதும் - ஏன் - பதினெட்டு நிமிடம் போதும்—அதிகாரம் நம்மிடம் இருக்கிறது!"

பெரியாருக்கு அண்ணா வாழ்த்து

திருச்சி, செப். 17—

பெரியாரின் 89-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ள இங்கு வந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், காலையிலேயே பெரியார் அவர்களின் இல்லம் சென்று மலர்மாலை அணிவித்து தம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

பெரியார் அவர்களும் அண்ணாவுக்கு ஜரிகைமாலை ஒன்று அணிவித்து தம் நல்வாழ்த்துக்களைக் கூறினார்.

ஒன்றுசேர ஊர்வலத்தில் அமர்ந்து வந்தனர்!

பின் பெரியார் அவர்களும் அறிஞர் அண்ணா அவர்களும் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஊர்வலத்தில் சுமார் ஐம்பதாயிரம் பேர்களுக்குமேல் கலந்து கொண்டனர்.

நீண்ட இடைவெளிக்குப் பின் பெரியாரும், அறிஞர் அண்ணாவும் ஒன்றுசேர அமர்ந்து ஊர்வலத்தில் வந்த அந்த அலங்கார வண்டியை, திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அன்பில் தருமலிங்கம் ஓட்டி வந்தார்.

சுமார் இரண்டு மணி நேரம் நடந்த ஊர்வலம் பெரியாரின் பிறந்த நாள் விழா நடக்கும் இடம் வந்துசேர்ந்தது. விழாவில் 1½ இலட்சம் மக்கள் குழுமியிருந்தனர்.

விழாவில் பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரத் தொண்டைப் பாராட்டி அண்ணா அவர்களும், சட்டமன்றத் தலைவர் சி. பா. ஆதித்தனார், உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துச்சாமி ஆகியோர் பேசினர்.

உருவச் சிலைத் திறப்பு

இன்று மாலை பெரியாரின் முழு உருவ வெங்கலச் சிலையை காங்கிரசுத் தலைவர் 'காமராசர் திறந்து வைத்தார்.

பகுத்தறிவுப் புரட்சிக்குப் பாடுபட்டவர் பெரியார்!

பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் முதலமைச்சர் அண்ணா பாராட்டு

சென்னை, செப். 17—

"'மக்களிடம் உள்ள மூடப் பழக்க வழக்கங்கள் மாற வேண்டும்—மக்கள் பகுத்தறிவாளர்களாக மாற வேண்டும்' என்பதற்காக அரும்பாடுபட்டவர் பெரியார்!

"ஜப்பான் போன்ற நாடுகளில் 200 ஆண்டுகள் கழித்துத்தான் பகுத்தறிவுப் புரட்சியை உண்டாக்க முடிந்தது; ஆனால் பெரியார், 20 ஆண்டுகளிலேயே பகுத்தறிவுப் புரட்சியை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்! இது, பெரியதோர் சாதனையாகும்! பகுத்தறிவுப் புரட்சி எந்த அளவு பாயவேண்டுமோ அப்படிப் பாய்ந்தால், நிச்சயம் வெற்றி உண்டு—அதற்கு நாம் பாதை போட்டாக வேண்டும்!

"தமிழகம் தாழாமல்—சரண்டப்படாமல்—தன்மான உணர்ச்சியுடன் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய பொன்மயமான எதிர்காலத்தை ஏற்படுத்தித் தரவேண்டும்—அதைப் பெரியார் அவர்கள் காணவேண்டும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், திருச்சி பிளாசா தியேட்டர் மைதானத்தில் நடைபெற்ற பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் 89-வது ஆண்டு பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் விளக்கினார்கள். மேலும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"பெரியார் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துக்கொள்ள இயலாது. எங்கள் வணக்கத்தையே காணிக்கையாக்குகிறோம்.

"பெரியார் அவர்கள், செல்வமும் செல்வாக்கும் உள்ள குடும்பத்தில் பிறந்தவர்; அவற்றை உதறித் தள்ளிவிட்டு, 'பகுத்தறிவும் பண்பாடும் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும்' என்பதற்காகத் தம்மைப் பொதுவாழ்வில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

"இந்தியை எதிர்த்து அவர் நடத்திய போராட்டங்களை எந்தத் தமிழனும் மறந்திடுதல் இயலாது!"

பெரியார் அவர்களுக்கு செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

பெரியார் நன்றியுரை

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து ஈ. வெ. ரா. பெரியார் பேசுகையில் கூறியதாவது:—

"அண்ணா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இது தமிழ் நாட்டுக்கே பெருமை தரக் கூடிய விஷயம்.

தனித் தமிழர் ஆட்சியை இப்போதுதான் காண்கிறோம்—அதை அனுபவித்தும் வருகிறோம்.

இதற்கு முன்பு தமிழர் ஆட்சி இருந்தது; ஆனால் அது, வடநாட்டுக்கு அடிமைப்பட்ட ஆட்சியாகத்தான் இருந்தது!

பெரிய தேச பக்தராக இருந்தாலும் சரி—தேசியவாதியாக இருந்தாலும் சரி—அவர்களாக ஒன்றும் செய்ய முடியவில்லை!

இந்த ஆட்சியில் யாருக்கும் குறைபாடு கிடையாது. இதுவரை யாரும் செய்யாததை இவர்கள் செய்ய வேண்டும். அதனால் நிலைத்த புகழ் பெற வேண்டும்."

ஒரு சகாப்தம்---ஒரு காலக் கட்டம்!

"பெரியாருடைய பெரும் பணி, ஒரு தனி மனிதரின் வரலாறு அல்ல — ஒரு சகாப்தம்! ஒரு காலக் கட்டம்! ஒரு திருப்பம்!

"நான் கண்டதும், கொண்டதும், அந்த ஒரே தலைவரைத்தான்!"

---அறிஞர் அண்ணா

லோகோ ஷெட் ஊழியர்கள் கொண்டாடிய 'அண்ணா விழா'

15—9—67-ல் அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை—பெரம்பூர் லோகோ ஒர்ச்ஸ் இரயில்வே தொழிலாளர்கள், இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்.

அறிஞர் அண்ணாவுக்குப் பெரியார் வாழ்த்து

திருச்சி, செப். 15—

அறிஞர் அண்ணா அவர்களின் 59-வது பிறந்த நாளையொட்டி திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி :—

“திரு. அண்ணாதுரை அவர்களுக்கு நான் வாழ்த்துரை வழங்குவதைவிட, காங்கிரசுக்கும் தி.மு.க., சுயமரியாதை இயக்கம் அல்லாத மற்றப் பொதுமக்களுக்கும் ‘அண்ணாதுரை ஆட்சியை ஆதரியுங்கள்’ என்று வேண்டுகோள் விடுப்பதையே அண்ணாதுரைக்கு வாழ்த்துக்கூறியதாகக் கருதுகிறேன்.

“அண்ணாதுரை ஆட்சி, மக்களுக்குப் பயந்து, ‘மக்களை எப்படித் திருப்தி செய்வது’ என்று கருதி நடப்பதாகக் கருதுகிறேன்.

“எப்படியானாலும், பொதுமக்களால் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பது மட்டுமல்லாமல்—பகுத்தறிவாளர் ஆட்சியாய் இருப்பதால்—நான் பாராட்டவும், ஆசி தெரிவிக்கவும் கடமைப்பட்டவன் என்ற முறையில் இதைச் சொல்லுகிறேன்.”

வண்ணப் பேழையில் அண்ணாவுக்கு வாழ்த்து

பேராசிரியர்--மாணவர்கள் அண்ணியிடம் வழங்கிய காட்சி

சென்னை, செப். 15—

சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள்—மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 15—9—67 மாலை 5-30 மணிக்குத் துவங்கியது.

கல்லூரி மாணவி ஒருவர் திருக்குறளை இசையுடன் பாட, விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

அடுத்து இசைச்சித்தர் சி. எஸ். செயராமன் குழுவினர், அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றியும், அண்ணா அவர்கள் நாட்டுக்கு வழங்கும் அரிய கருத்துக்களையும், தத்துவங்களையும் இசைத் தமிழால் முழங்கினர்.

‘அண்ணா என்னும் பெயரே,
அகிலம் வழங்கும் மதிப்புரை’
என்று அவர் பாடிய பாட்டும்,
‘மறக்க முடியுமா? மறுக்க
முடியுமா? சிறந்த கருத்திருக்
குச் சிந்தனைச் சுரங்கத்தை—
தி.மு.க. தலைவரை’ என்ற
பாடலும் கூடியிருந்தோரின்
உள்ளத்தைத் தொட்டன.

அடுத்து, திருமதி சௌந்திரம் கைலாசம் அம்மையார் தலைமையில், மாணவ-மாணவியர் பங்கேற்ற கவியரங்கமும் பின்னர் கருத்தரங்கமும் நடைபெற்றன.

கவியரங்கத்தை வாழ்த்தி நாடாளுமன்ற உறுப்பினர் கி. மனோகரன் அவர்களும், கருத்தரங்கத்தை வாழ்த்தி திரு. ம. பொ.சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்களும், அரசு வழக்குரைஞர் திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களும் உரையாற்றினர்கள்.

மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்களின் சிறப்பியல்புகளை விளக்கியும், முத்துப்பேட்டையிலிருந்து அண்ணா தீச்சுடர் ஏந்திவந்த 59 மாணவர்களைப் பாராட்டியும் சிறப்புரையாற்றினர்.

இந்த விழாவிற்கு வந்திருந்த அண்ணியார் திருமதி இராணி அண்ணா அவர்களிடம், பல வண்ண வெள்ளிப் பேழையில் அண்ணாவுக்குப் பாராட்டிதழை வைத்து, அரசி மேரி கல்லூரி முதல்வர் திருமதி ஐராவதி அம்மையார் வழங்கினார்.

(தொடர்ச்சி 3-ம் பத்தி பார்க்க)

முத்துப்பேட்டையிலிருந்து வந்த அண்ணா தீச்சுடர்!

அண்ணியார் கையில் அளித்த காட்சி!

சென்னை, செப். 15—

தஞ்சை மாவட்டம் முத்துப்பேட்டையிலிருந்து மாணவர்கள் ஏந்திவந்த தீச்சுடரை, இன்று இரவு அண்ணியார் ஏற்றுக் கொண்டார்கள்.

இந்தத் தீச்சுடரை 59 மாணவர்கள் ஒருவர் மாறி ஒருவராக ஏந்திக்கொண்டு (சுமார் 230 மைல்) ஓடிவந்து சென்னையடைந்தனர். இந்த மாணவர் குழுவை, முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம் வழிநடத்தி வந்தார்.

அவர்களை நகர எல்லையில், சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணனும், துணைமேயர் டி. கிருஷ்ணமூர்த்தியும் வரவேற்று அண்ணா இல்லத்துக்கு அழைத்துவந்தனர். அந்த நேரத்தில் அண்ணியார் அவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய அண்ணா பிறந்த நாள் விழாவில் பங்கு கொண்டிருந்தார்கள். மாணவர் குழுவினர், அண்ணா இல்லத்திலிருந்து பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய விழாக்கூடத்திற்கு (நூற்றாண்டு விழா மண்டபம்) ஓடிவந்தனர்.

மேடையிலிருந்த அண்ணியார் அவர்களிடம் ஒப்படைக்க—தீச்சுடரை ஏந்திய மாணவரும், அவரைப் பின்தொடர்ந்து 58 மாணவர்களும் மேடை நோக்கி ஓடிவந்தனர்.

தீச்சுடரை, துணைமேயர் கிருஷ்ணமூர்த்தி வாங்கி அண்ணியார் கையில் அளித்தார்.

இந்த நிகழ்ச்சி, கூடியிருந்தோர் உள்ளத்தைக் கவருவதாக அமைந்தது!

தமிழகத்தில் அறிஞர் அண்ணாவின் புகழுக்கு ஈடாக எவரும் இல்லை!

6 மாதத்தில் கழக அரசு மகத்தான செயல்களைச் செய்துள்ளது-- காங்கிரசல்லாத மாநில ஆட்சிகட்கு ஒரு வழிகாட்டி தமிழகமே!

சட்டம்--அமைதி ஒழுங்காகவே உள்ளது; காங்கிரசுத் தீர்மானம் வெறும் புரளியே!

படி அரிசித் திட்டம்--தமிழுக்கு முக்கியத்துவம்--புதிய அமைச்சரவையின் மெச்சத்தகுந்த சாதனைகள்—கல்கத்தா இதழின் கவனத்தை ஈர்க்கும் மதிப்பீடு

“கேரளத்தில் உள்ளதுபோல் குழப்ப நிலை ஏதுமில்லாமல் பொறுப்பேற்ற ஆறு மாத காலத்தில் பாராட்டத்தக்க காரியங்களைத் தி. மு. க, ஆட்சி செய்து முடித்திருக்கிறது!

“மதுவிலக்கு, மொழித் துறை ஆகியனவற்றில் திட்டவட்டமான கருத்தினைத் தெரிவித்திருப்பதைப் போலவே தமிழகத்தின் மற்றைய பல விவகாரங்களிலும் சாத்தியக்கூறுனதும், மெச்சத்தகுந்ததுமான முறையில் காரியமாற்றியிருக்கிறது கழக அரசு”

என்று கல்கத்தாவிலிருந்து வெளிவரும் ‘ஸ்டேட்ஸ்மென்’ நாளிதழில் (9—9—67) அதன் சென்னை நிருபர் எழுதியுள்ள செய்திக் கடிதத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். இதற்குமுன், கேரளத்து நிலைமைகள் பற்றி நேரில் சென்றறிந்து மூன்று கட்டுரைகள் எழுதியதனை அடுத்து, தமிழகத்தைப் பற்றியும் அவர் எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தச் செய்திக் கடிதத்தின் முக்கியப் பகுதிகள் வருமாறு :—

திரு. அண்ணாதுரையின் புகழ் இப்போது இருப்பதைப் போல் இதற்கு முன் எப்போதும் இப்படிப்பட்ட உச்சக் கட்டத்தில் இருந்ததில்லை!

அடக்கம்—உளத் தூய்மை—நிலைப்புத்தன்மை ஆகிய அடிப்படைகளில் காங்கிரசு அல்லாத எல்லா மாநில அரசுகளிலும் முதன்மைத் தன்மை வகிக்கிறது அவரது அமைச்சரவை!

இத்தகைய பெருமைகளுக்குப் பல காரணங்கள் உண்டு; அவைகளுள், அண்ணாதுரையின் திறமையும் தகுதியும் முக்கியமானதும் முதலானதுமாகும்.

அடுத்து, அவரது கட்சி பெற்றிருக்கும் தனித்த பெரும்பான்மையைக் குறிப்பிடலாம்.

பிரச்சினைகளை அணுகுவதில் முதலமைச்சர் கடைபிடிக்கும் முதிர்ந்த எச்சரிக்கையான போக்கும், அமைச்சரவையின் திறமைக்கு அடிப்படையானதோர் காரணமாகும்.

எல்லாப் பிரச்சினைகளையும் ஒரே நேரத்தில் போட்டுக் குழப்பிக்கொள்வதில்லை—தமிழகத்து முதலமைச்சர்; ஒரு சமயத்தில் ஏதாவது ஒன்றில்தான் கவனம் செலுத்துகிறார்; பிரச்சினைகளை முதலில் புரிந்து கொண்ட பின்னரே தீர்வு காண முயலும் போக்குதான் அவரது வெற்றிகளுக்கும் புகழுக்கும் அடிப்படைக் காரணமாக இருக்கிறது!

அவருடைய முதல் அக்கறை, உணவு நிலைமையாகத்தான் இருந்தது. சுறுசுறுப்பான கொள்முதல்—சாதகமான பருவமழை—இரண்டும் உணவு நிலைமை சீரடைய அவருக்கு மேலும் சாதகமாக இருந்தன!

அடுத்து, தமிழகத்தில் மிகப் பெரும் அறுவடை கிடைக்கப்போகிறது! அதுவரையில், போதுமான அளவுக்குத் தானியம் கைவசம் இருக்கிறது!

சென்னை, கோவை நகரங்களில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்குவது, பொதுமக்களின் பாராட்டைப் பெரிதும் சம்பாதித்துக்கொடுத்திருக்கிறது!

கழக அரசின் தனித்த மிகப் பெரிய சாதனை, இந்தத் திட்டம்தான்!

மற்றொரு சிறிய—ஆனால் சிறந்த சாதனை, நெடுந்தூர பஸ்களின் கட்டணங்களைக் குறைத்தது! சென்னையிலிருந்து திருச்சி செல்லும் ஒரு பயணிக்கு இப்போது இரண்டு ரூபாய் வரையில் மிச்சப்படுகிறது!

மக்கள் மத்தியில் மகிழ்வினைக் கொடுத்திருக்கும் முயற்சிகளில் இதுவும் ஒன்று!

தமிழுக்குக் கழக அரசு கொடுத்திருக்கும் முக்கியத்துவம், மாநிலம் முழுவதிலும் ஒருவகை மனநிறைவினை ஏற்படுத்தியிருக்கிறது!

‘தொழில் துறையில் கழக அரசு இதுபோன்ற புதிய திருப்பங்கள் எதையும் செய்யவில்லையே’ என்று கூறலாம்; ஆனால், நாடு முழுவதிலும் நிலவும் பொருளாதார – தொழில் துறை தேக்க நிலை அதற்கு முக்கியத் தடையாக இருக்கிறது என்பதனை எவரும் ஒத்துக் கொண்டாக வேண்டும்!

கேரளத்தைப் போலவோ, அல்லது மேற்குவங்கத்தைப் போலவோ பொது அமைதிக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் குந்தகம் விளையும் நிலை, இதுவரையில் ஒன்றுகூட எழவில்லை!

தங்களது கட்சிக்காரர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள் என்று தமிழ்நாடு காங்கிரசு தீர்மானம் போட்டிருப்பது உண்மைதான்; ஆனால், அது ஒரு மிகைப்படுத்தப்பட்ட செய்தி–வீண் புரளி! எங்கோ நடந்திருக்கும் ஒரு சில விளைவுகளை வைத்துக் கொண்டு மிகைபடுத்தப்பட்ட செய்திதான் அது!

‘நிர்வாகப் பிரச்சினைகளில் தலையிடாதீர்’ என்று கழகத்தவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் திரு. அண்ணாதுரை, இத்தொடர்பில் மேலும் ஒரு பாராட்டினைப் பெற்றவராகிறார்.

தொழிலாளர் துறையை எடுத்துக் கொண்டால்கூட, கேரளத்தையும், வங்காளத்தையும் காட்டிலும் தமிழகம் பெருமைப்படத்தக்க வகையில்தான் இருக்கிறது! மற்ற மற்ற மாநிலங்களைப்போல், ‘கேரோ’க்கள், வேலைநிறுத்தங்கள் தமிழகத்தில் இல்லாதவாறு பார்த்துக் கொண்டிருக்கிறது கழக அரசு!

‘தவறு’ என்று சுட்டிக்காட்டும் அளவுக்கு இதுவரையில் தி. மு. க. நிர்வாகம், எந்தவித வழுவல்களும் இல்லாமல் இயங்கிவருகிறது!

இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் உரியவர்–காரணகர்த்தா, முதலமைச்சர் அண்ணாதுரைதான்! இன்று அவர் தமிழகத்தில் பெற்றிருக்கும் பெருமைக்கு, காமராசர் உள்ளிட்ட வேறு எவரும் ஈடு கொடுக்க முடியாது!

(2-ம் பத்தியின் தொடர்ச்சி)

இறுதியாகப் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார், அண்ணாவுக்கு வாழ்த்துரை வழங்கினார்.

விழாத் துவக்கத்தில் மாணவர் சனார்த்தனம் வரவேற்புரையாற்றினார்.

இந்த விழா நிகழ்ச்சிகள் அனைத்தையும் அனைத்திந்திய வானொலி நிலையத்தார் வானொலியில் ஒலிபரப்புவதற்குரிய வகையில் பதிவு செய்துள்ளனர்.

நிகழ்ச்சிகள் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளன.

தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. இராசகோபால் நன்றி கூறினார்.

கவியரங்கத்தில் கலந்துகொண்டவர்கள் :—ஆதியப்பன் (கலைக் கல்லூரி), சந்திரசேகரன் (லயோலா கல்லூரி), காசி விசுவநாதன் (கலைக் கல்லூரி), சூரியராசன் (ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி), முத்துசாமி (சென்னை மருத்துவக் கல்லூரி).

கருத்தரங்கத்தில் கலந்து கொண்டோர்:—துரைமுருகன் (மாநிலக் கல்லூரி), கலியரத்தினம் (சட்டக் கல்லூரி), வி. ஜி. மாலதி (எத்திராஜ் கல்லூரி), இராஜேசுவரி (வட சென்னை மகளிர் கல்லூரி), சுந்தராம்பாள் (ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி), கஸ்தூரி (சட்டக் கல்லூரி).

அண்ணா புகழ் பாடிய முப்பெரும் நிகழ்ச்சிகள்!

அமைச்சர் கருணாநிதி--கவிஞர்கள்--கட்சித் தலைவர்கள் பங்கேற்ற பெருவிழா

சென்னை, செப். 17—

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவின் மூன்றும் நாளான இன்று சென்னையில் முப்பெரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காலை 10 மணி முதல் பிற்பகல் 1-30 மணிவரை கவியரங்கமும், பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை விளையாட்டுப் போட்டிகளும், அடுத்து 7 மணிக்கு கடற்கரையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றன.

இவையன்றி, சென்னையில் பல்வேறு வட்டங்களிலும்—கொடியேற்றுதல், இனிப்பு வழங்குதல், உணவளித்தல், இசை, கலையரங்குகள் முதலியன நடத்தப்பட்டன.

கவியரங்கம்

வழக்கறிஞர்கள் வேலூர் நாராயணன், நா. கணபதி ஆகிய இருவரும் முன்னின்று ஏற்பாடு செய்த 'அண்ணா கவியரங்கம்' இன்று காலை 10 மணிக்கு தர்மப்பிரகாஷ் கலையரங்கில் சீரும் சிறப்புமுற நடந்தேறியது.

கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தில் மக்கள் நிரம்பி வழிந்தனர்.

வந்திருந்த அனைவரையும் திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் வரவேற்றுப் பேசினார்.

கவியரங்கத்திற்கு அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் தலைமையேற்றார்.

11 கவிஞர்கள் பங்குகொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பில் யாத்திருந்த கவிதையை அரங்கேற்றினர்.

தலைமைவகித்த அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், தம் முன்னுரை — முடிவுரை — இடையிலே கவிஞர்களை அறிமுகப்படுத்தும் உரை—ஆகிய அனைத்தையும் கவிதையாகவே யாத்துப் பாடினார்.

கவிதையின் ஒவ்வொரு வரியையும் சுவைத்து இன்புற்றனர் கூடியிருந்த மக்கள்!

கவிஞர் ஆனந்தம், 'தலைவர் அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் பொன்னிவளவன் சார்பில் அவர் எழுதிய 'பேச்சாளர் அண்ணா' என்ற தலைப்பில் திரு. நடராசனும், கவிஞர் நாவுக்கரசன், 'எழுத்தாளர் அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் தமிழ்ப்பித்தன், 'தத்துவமேதை அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் முடியரசன், 'தாய்மொழிக் காவலர் அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் வேழவேந்தன், 'அன்னை அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் வாணிதாசன், 'நாடக ஆசிரியர் அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் முத்துலிங்கம், 'நடிகர் அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் மணிமுடிச்சோழன், 'அரசியல்வாதி அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் அப்துல் ரகுமான், 'முதலமைச்சர் அண்ணா' என்ற தலைப்பிலும், கவிஞர் சுப்பு ஆறுமுகம், 'மனிதர் அண்ணா' என்ற தலைப்பிலும் பாடினர்.

குடந்தை சீனிவாசன், அண்ணா அவர்களைப் பற்றி அமைச்சர் கருணாநிதி எழுதிய பாடலை இசையுடன் பாடினார்.

இறுதியாகப் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார், கவிஞர்களையும், கவியரங்கத் தலைவர் அமைச்சர் கருணாநிதி அவர்களின் தனிப்பெரும் புலமையைப் பாராட்டியும் உரையாற்றினார்.

வேலூர் நாராயணன் நன்றிகூற கவியரங்கம் இனிதே முடிவுற்றது.

விளையாட்டுப் போட்டி

அடுத்து, எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், பல்வேறு தொழில்துறைகளில் உள்ளவர்களும் கலந்துகொண்டனர்.

முன்னாள் மேயர் திரு. மைனர் மோசஸ் அவர்களும் கலந்துகொண்டு குண்டு எறிவதில் முதலவராக வெற்றிபெற்று, அதற்கான வெள்ளிக் கோப்பையைப் பரிசாகப் பெற்றார்.

அதிகப் பரிசுகள் பெற்ற சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளிக்கு, சுழற்கோப்பை கிடைத்தது.

இந்த விளையாட்டுப் போட்டிகள் அமைச்சர் கருணாநிதி முன்னிலையில் நடைபெற்றன.

அமைச்சர், விளையாட்டு வீரர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

பொதுக்கூட்டம்

தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்கேற்ற அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம், மாலை 7-மணிக்கு திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடைபெற்றது.

கூட்டம் தொடங்குமுன் சைதை நடராசன் குழுவினரின் நாதசுர இன்னிசை நிகழ்ச்சியும் அடுத்து, தஞ்சை பாபு குழுவினரின் கரக—காவடி ஆட்டமும் நடைபெற்றன.

அடுத்து, நன்னிலம் சதாசிவம், அண்ணா அவர்களின் சிறப்பை இசையால் முழக்கினார்.

தோழர் டி. கே. பொன்னுவேலு முன்மொழிய—தோழர் எஸ். வி. வேலு வழிமொழிய—மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் கூட்டத்துக்கு தலைமை ஏற்றார்.

காஞ்சி சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., வலது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் எம். கல்யாணசுந்தரம், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி, ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி. (முஸ்லிம் லீக்), எஸ். எஸ். மாரிசாமி எம்.பி. (சுதந்தரா), மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் காஞ்சி மணிமொழியார், இடது கம்யூனிஸ்டுத் தலைவர் பி. இராமமூர்த்தி, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் ஆகியோர், அறிஞர் அண்ணா அவர்களின் அரும்பெரும் ஆற்றலையும், சீரிய பண்பினையும் சிறப்பித்தும், வாழ்த்தியும், பாராட்டியும் உரையாற்றினர்.

இறுதியாகப் பேசிய அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், 'பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் அண்ணாவின் பிரதிநிதியாக இருந்து பெற்றுச் செல்லவே வந்திருப்பதாக'க் குறிப்பிட்டு, பாராட்டிய தோழமைக் கட்சித் தலைவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்தார்.

அமைச்சர் கருணாநிதி அவர்களுக்குப் பலர் மலர்மாலைகளும், கைத்தறியாடைகளும் அணிவித்தனர்.

நரிக்குறவர் ஒருவர் மேடையேறி மாலையணிவித்தபோது, கூட்டமே சிரிப்பொலியில் ஆழ்ந்தது!

இரவு 10-30 மணிக்குக் கூட்டம், வை. பாலசுந்தரம் நன்றி கூற முடிவுற்றது.

கூட்டம் முடிந்ததும், வாண வேடிக்கைகள் நடைபெற்றன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

19--9--67

தோகைமலை

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ஆசாத் திடலில்; தலைவர்: மா. கந்தசாமி பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், என். சுப்பையா பி.ஏ.பி.எல்., என். பாலன் பி.ஏ.பி.எல்., கே.ஆர்.வி. சிவராசு, மா. சுந்தரராசன், வீ. ஈசுவரன், சை. சம்சுதீன், கோ. அண்ணாதுரை.

கோவை 8-வது வட்டம்

அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக் குழுச் சார்பில் இரவு 7-மணிக்கு காந்திபுரம் 100 அடி சாலையில்; பேசுவோர்: எஸ். பி. சற்குணம், மற்றும் பலர்.

திருச்சி 24-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு தாராநல்லூர் அலங்கநாதபுரம் சாலையில்; தலைவர்: பி. தண்டபாணி; பேசுவோர்: அன்பில் தருமலிங்கம், அ. நடராசன், பி.சுப்பிரமணியம், பி. சோமு, எஸ். இராமலிங்கம். (கண்ணம்மா—தங்கராசு கலை நிகழ்ச்சி நடைபெறும்).

நசியனூர்

தி. மு. க. சார்பில் பகல் 12-மணிக்கு; தலைவர்: ஆ. கு. சின்னச்சாமி; பேசுவோர்: சின்னச்சாமி எம்.எல்.ஏ., க. அன்பரசு, கொ. இளமாறன், மு.மாணிக்கம்.

கொடுமுடி

தி மு க., எம் ஜி ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு பெரிய கோயில் எதிரில்; தலைவர்: முத்துச்சாமி; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., க. ர. நல்லசிவம் எம்.எல்.ஏ., கலைமணி, அத்தாணி பாபு, பெ. ந. தமிழ்மணி.

பத்தமடை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு காந்தி திடலில்; தலைவர்: டி. எஸ். ஆதிமூலம் எம்.எல்.ஏ.; பேசுவோர்: வி. கிருட்டினமூர்த்தி, ந. பரமசிவம்.

லாலாப்பேட்டை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கலைவாணர் திடலில்; தலைவர்: எல்.ஆர். கிருட்டினன்; பேசுவோர்: பெ. சௌந்தரபாண்டியன் எம்.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ., சி. தமிழரசி பி.ஏ., சி. மதியன்பன், தங்கமுத்து, க அரங்கசாமி, பெ. சௌந்தர பாண்டியன் எம்.எல்.ஏ.

சாத்தூர்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: சி. சாகுல் அமீது; பேசுவோர்; தேவகிபாண்டியன், மற்றும் பலர்.

மருதூர்

பொதுப் பணி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: துரை பெருமாள்; பேசுவோர்; புலவர் அறிவுடைநம்பி, எம். சண்முகம் எம்.எல்.ஏ., எம.இராமன் எம்.எல்.ஏ.,புலவர் வேங்கை மார்பன், டி. பெருமாள் எம்.சி., வ. துரைராசன் எம்.பி., எம் துரைராசன் எம்.சி., ஆர். சாமிக்கண்ணு, எஸ். பத்மநாபன், தாவுத் கான், வி. ரவி, நா. கலைக்கோவன், என். நடராசன்.

திருச்சி

வள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 9 மணிக்கு புகைவண்டி நிலையம் அருகில்; தலைவர்: எம். இராமையா; முன்னிலை: பி.எஸ். அப்துல் ஹக்; பேசுவோர்: குளித்தலை முத்துக்கிருஷ்ணன், சௌந்தரபாண்டியன் எம்.எல்.ஏ. கே. ஏ. குஞ்சிதபாதம் பி.ஏ. பி.எல்., க. இராசவேலு எம்.ஏ.

ஸ்ரீ ஜோதி வேஸ்ட் பேப்பர் கம்பெனி
21, அண்ணாபிள்ளை தெரு, சென்னை-1.
தின, வார, மாத வாசித்த பத்திரிகைகளை நியாய விலைக்கு வாங்கி, மலிவான விலைக்கு விற்பனை செய்கிறோம்.

எதிரியைப்பற்றி எதிரெதிரான பேச்சு

"எப்போது—எந்த நேரத்தில் உள்ளே நுழையலாம் என்று எல்லையிலே சீனாக்காரன் காத்துக்கொண்டிருக்கிறான்! நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!"

—14—9—67-ல் கும்பகோணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் காமராசர்

"சீன அபாயமோ ஆக்கிரமிப்போ—எப்போதுமே இருப்பதுதானே? இதில் புதிதாக என்ன இருக்கிறது?"

—12—9—67 அன்று லூதியானாவில் (பஞ்சாப்) தலைமை அமைச்சர் இந்திரா.

சீரணி உருவாக்கிய பள்ளிக்கட்டிடம்

18-9-67

அண்ணா பிறந்த நாள் பரிசாக எம். ஜி. ஆர். அளித்தார்

18-9-67

சென்னை. செப். 16—

சென்னை மாவட்டச் சீரணியினர் பத்தே நாளில் உருவாக்கிய பள்ளிக் கட்டிடம், அறிஞர் அண்ணா அவர்களிடம், பிறந்த நாள் பரிசாக இன்று ஒப்படைக்கப்பட்டது.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் இக்கட்டிடத்தைத் முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் ஒப்படைத்தார்.

ஊரூரில் கட்டப்பட்ட இந்தப் பள்ளிக் கட்டிடத்தை, அண்ணா அவர்கள் திறந்துவைத்தார்.

இவ்விழா சட்டமன்றத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தலைமையில் நடைபெற்றது.

நலத் துறையமைச்சர் திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா, திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்தார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. இராம. அரங்கண்ணல் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

விழா முடிவில் மாவட்டச் சீரணித் தலைவர் நீலநாராயணன் நன்றி நவின்றார்.

சோழவந்தான் தொகுதியில் அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டங்கள்

அண்ணா பிறந்த நாள் விழாவினையொட்டி, நிலக்கோட்டை வட்டம் சோழவந்தான் தொகுதியில் நடைபெறும் தி.மு.க. பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்வோர்:—

செப். 19: கச்சைகட்டி—எஸ். நெல்லைமாறன்; 20: கீழ்நாச்சிகுளம் — எஸ். நெல்லை மாறன்; 26: சி. புதூர் — எஸ். நெல்லைமாறன், நீ. அன்புச்செழியன் பி.ஏ., எம்.பி.; 30: காடுபட்டி—சி. தமிழரசி பி.ஏ., நீ. அன்புச்செழியன்.

அக். 2: மேட்டுநீரேத்தான்—நீ. அன்புச்செழியன்; 3: விளாம்பட்டி — நீ. அன்புச்செழியன்; 4: வாடிப்பட்டி — சி. தமிழரசி, நீ. அன்புச்செழியன்; 5: தேவசேரி—சி. தமிழரசி, நீ. அன்புச்செழியன்; 6: பாலமேடு—சி. தமிழரசி, நீ. அன்புச்செழியன்; 7: அய்யன்கோட்டை—நீ. அன்புச்செழியன்; 8: சோழவந்தான்—அமைச்சர் ஏ. கோவிந்தசாமி.

மேற்கண்ட கூட்டங்களில் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பி. எஸ். மணியன் பி.ஏ.பி.எல். கலந்துகொள்கிறார். இதற்கான ஏற்பாடுகளை நிலக்கோட்டை வட்ட தி.மு.க. துணைச் செயலாளர் கூ. குருசாமி சிறப்பாகச் செய்துவருகிறார்.

பி.எல்., எஸ். எம். வி. சாமி. அ. மலர்மன்னன், மா. முத்து, மு. வீரபத்திரன், மு. இராமலிங்கம், வி. இராமசாமி. (மணி—சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

செப். 20: காலை 10 மணி: வேலூர்—நகராட்சி வரவேற்பு;
21, 22: நெல்லை மாவட்ட நிகழ்ச்சிகள்;
23: திருச்சி மாவட்ட நிகழ்ச்சிகள்.

கோ. விசுவநாதன்

எம்.ஏ., பி.எல்., எம்.பி.

சுற்றுப்பயணம்

செப். 19: அம்மாபாளையம்; 20: வேலூர்; 21: செம்பனூர் கோவில்; 22: மேட்டுப்பாளையம்; 23: அணைக்கட்டு; 24: விருபாட்சிபுரம்; 27: வந்தவாசி.

புலவர் பொன்னிவளவன்

சுற்றுப்பயணம்

செப். 19: பெரம்பலூர் தொகுதி; 20: சென்னை — தேனாம்பேட்டை; 21: கம்மவான்பேட்டை; 22: சென்னை 14-வது வட்டம்; 23: சென்னை — எழும்பூர்; 24: சென்னை—ஆயிரம் விளக்கு.

கூடலரசன்

சுற்றுப்பயணம்

செப். 19: திருவில்லிபுத்தூர்; 20: கரூர்; 21: கோடாங்கிபட்டி; 22: திருச்சி; 23: அழிஞ்சிக்குப்பம்; 24: வேலூர்; 25: செங்கம்; 26: கட்டுக்குடிபட்டி; 27: சுப்பிரமணியபுரம்; 28: கோ. புதூர்; 29: மதுரை-17; 30: தர்மத்துப்பட்டி.

புலவர் அறிவுடைநம்பி

சுற்றுப்பயணம்

செப். 19: விழுப்புரம்; 20: ராசபாளையம்; 21: தண்ணீர்ப்பள்ளி; 22: வளையப்பட்டி; 23: முசிறி; 24: மதுரை; 25: ஆண்டிப்பட்டி கண்ணியபிள்ளைப்பட்டி; 26: செயங்கொண்டசோழபுரம்; 27: வைத்தீசுவரன்கோவில்; 30: குறிஞ்சிப்பாடி. அக். 1: இராணிப்பேட்டை.

ஆர். ஆர். முனுசாமி

எம்.எல்.ஏ நிகழ்ச்சிகள்

செப். 19: ஈபக்குணம்; 20, 21, 22, 23: மேல்மலையனூர்; 29-வரை: தொகுதி; 30: ஆனந்தபுரம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-1.) [illegible] வெளியிடப்பெறுது.